திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடப்பாண்டில் பத்தாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த 30 மாணவ மாணவிகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க நிகழ்ச்சி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சேதுராமன் ஏற்பாட்டில் மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் காட்டுப்பள்ளி ஊராட்சியில் உள்ள பள்ளியில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு 30 மாணவ மாணவிகளுக்கு தலா ஐந்தாயிரம் ஊக்கத்தொகையை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் நிர்வாகிகள் மு. பகலவன், வெ. அன்புவாணன், ஆ.ராஜா, முகமது அலவி, பா.து.தமிழரசன், கன்னிமுத்து, சங்கர், கேசவன், ராஜ்குமார், ஸ்ரீமன், செல்வம் , ராஜா,மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

தலைமைக் கழக அறிவுறுத்தலின்படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் சித்திக் அலி ஏற்பாட்டில் வாக்காளர் தீவிர சரிபார்ப்பு S.I.R. விழிப்புணர்வு குறித்து, சிறுபான்மை சமூக பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் திருத்தணியில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் உடன் நகர கழக செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் சிறுபான்மை அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் வழிகாட்டி! இந்தியாவின் திசை காட்டி!!

முரசொலி வாசகர் வட்டம் நடத்தும் மூன்றாவது கருத்தரங்கம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – கி.செந்தில்வேல் உரையாற்றுகின்றனர்!

மாவட்ட அமைப்பாளர் தடா ஓ.சுந்தரம் தலைமை!

சென்னை, நவ.15-

சென்னை தெற்கு மாவட்டத்தில் கழக தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட முரசொலி வாசகர் வட்டத்தின் மூன்றாவது கருத்தரங்கம் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இயங்கிவரும் கலைஞர் அரங்கத்தில் இன்று (15-11-2025) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் முரசொலி வாசகர் வட்ட மாவட்ட அமைப்பாளர் தடா ஓ.சுந்தரம் தலைமையில் நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டில் திராவிட மாடல் நாயகர் கழக தலைவர் அவர்களின் ஆட்சியின் கீழ் நாள்தோறும் சாதனை அறிவிப்புகள் வெளியிடப்பட்டு இந்திய ஒன்றியத்தின் மாநிலங்களிலே இது வரை இல்லாத அளவிற்கு கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் மட்டுமல்லாது பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்று தமிழ் நாட்டின் வழிகாட்டியாக செம்மாந்து நடை போட்டு வருகிறார் திராவிட மாடல் முதல்வர். அது மட்டுமின்றி ஒன்றிய பா.ஜ.க. தலைமையிலான காவி அரசு பா.ஜ.க அல்லாத மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட பல மாநிலங்களை குறிப்பாக தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் நிதி ஒதுக்கீடை குறைத்தும், ரத்து செய்தும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தை தம் கைப்பாவையாக மாற்றி வைத்துக் கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்று வாக்கு திருட்டுகளை நடத்தி மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி நாட்டை காவி மயமாக்கும் திட்டத்தை செயல்படுத்த துடிக்கிறது.

இந்நிலையில் அகில இந்திய அளவில் எஸ் ஐ ஆர் ஏமாற்று நாடகத்தை மக்கள் மத்தியில் கொண்டு வந்து அம்பலப்படுத்தி உள்ள கழக தலைவர் அவர்கள் மக்கள் மன்றம் நீதிமன்றம் என்று இரு தளங்களிலும் மதவாத ஆட்சியை எதிர்த்து களமாடியும் பல்வேறு மாநில கட்சிகளையும், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ராஷ்ட்ரிய ஜனதா தள் போன்ற தேசிய கட்சிகளையும் ஒரு குடையின்கீழ் திரட்டி இந்தியா கூட்டணி வலுவாக அமைந்திட பாடுபட்டு வருகிறார். மாநில உரிமைகள், காவி மதவாதம், தவறான பொருளாதாரக் கொள்கைகள், வாக்குத் திருட்டு போன்ற பிரச்சனைகளில் தென்னகத்திலிருந்து போராடும் வலிமை மிக்க போர் வீரராக நிமிர்ந்து நிற்கும் கழகத் தலைவர் வடபுலத்து மக்களும் போற்றுகின்ற வகையில் இந்திய அரசியல் வானில் ஒளிவிட்டு பிரகாசித்து இந்திய அரசியலுக்கே ஒரு திசைகாட்டியாக விளங்குகின்றார்.

இந்நிலையில் கடந்த நான்கு ஆண்டுகால ஆட்சியிலே நாம் சாதித்துள்ள சாதனைகள் இந்திய அரசியலின் திசைவழி போக்கை கழகத் தலைவர் ஸ்டாலின் அவர்கள் எவ்வாறு தீர்மானித்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியிலே வெற்றி பெற்று வலம் வருகிறார் என்பது பற்றிய சென்னை தெற்கு மாவட்ட முரசொலி வாசகர் வட்டத்தின் கருத்தரங்கத்தை இன்று (15-11-2025) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடக்க உரையுடன் தமிழ் கேள்வி செந்தில் வேல் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற, சட்டமன்ற, மாவட்ட கழக நிர்வாகிகள், பெருமளவில் இளைஞர் அணி தோழர்கள் பங்கேற்கின்றனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

படப்பை ஆ.மனோகரன் தலைமை! கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 15-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. கிளைக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (16.11.2025, ஞாயிற்றுக்கிழமை,) காலை 8 .00 மணியளவில் ஜெ.சி. திருமண மண்டபம், கரசங்காலில் நடைபெறுகிறது.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

தெற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ.நந்தகோபால் சி.பார்த்தசாரதி, மூ.ராஜேந்திரன், எஸ்.கர்ணன், குமுதா சுமன், டி.லோகநாதன், த.ஏழுமலை, என்.வாசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆலோசனை வழங்குகிறார்.

இதில் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றியக் குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி, வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழு துணைப் பெருந்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாவட்ட - ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA-2, வாக்குச் சாவடி இ-முகவர்கள் BDA உள்ளிட்டோர் அவசியம் தவறாமல் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

பொருள் : .SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத்திருத்தம் குறித்து,

என் வாக்குச்சாவடி... வெற்றி வாக்குச் சாவடி..! பணி குறித்து,

நவம்பர்-27 இளம் தலைவர் பிறந்தநாள் விழா,

2026 சட்டமன்ற தேர்தல் பணி,

கழக வளர்ச்சி பணி

இவ்வாறு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தெரிவித்துள்ளார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.77–இல், வாக்குச் சாவடி எண்.65–க்குட்பட்ட புளியந்தோப்பு 1 மற்றும் 2–ஆவது தெருக்களில் நடைபெற்று வரும் SIR–வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளைப் பார்வையிட்டு, அது குறித்து அப்பகுதி பொதுமக்களிடமும் துறை சார்ந்த அலுவலர்களிடமும் கலந்துரையாடினார்.

மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில்!

ஆர்.கே.நகர், இராயபுரம், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மாதாந்திர கூட்டம்!

முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்!

சென்னை, நவ.15

பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார் பேட்டை மண்டலத்திற்குட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர், ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கான மண்டலக் குழு கூட்டம் தண்டையார் பேட்டை திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல 4. அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமை வகித்தார்.

மண்டல அதிகாரி ராஜ் குமார், உதவி செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, ஹரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் திமுக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டில் நடைபெறும் பணிகள் குறித்தும், செயல்படுத்தக் கூடிய திட்டங்கள் குறித்தும் பேசினார்கள்.

இந்த கூட்டத்தில் 9 கோடி மதிப்பீட்டில் 28 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

அதில் முக்கிய தீர்மானங்களாக கொடுங்கையூர் குப்பை கொட்டு வளாகத்தில் பிரதான நுழைவாயிலை இணைக்கும் வகையில் சிமெண்ட் கான்கிரீட் சாலை 5 கோடியை 98 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படுவது, 38 வது வார்டுக்கு உட்பட்ட கருணாநிதி நகர், துர்கா தேவி நகர், சாஸ்திரி நகர், இந்திரா காந்தி நகர், சுந்தரம் நகர், வினோபா நகர், உள்ளிட்ட பகுதிகளில் தெரு பெயர் பலகை வைப்பதற்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது, 39 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் வேகத்தடை அமைப்பதற்காக 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது கொருக்குப் பேட்டை சிகரந்த பாளையம், காமராஜர் நகர், மீனம்பாள் நகர், பாரதி நகர், ஆகிய பகுதிகளில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணி தொடங்குவது, வியாசர்பாடி எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை மேம்பாலத்திற்கு கீழ் ஒரு கோடியே 91 லட்சம் மதிப்பீட்டில் அழகு படுத்தும் பணி தொடங்குவது, இளைய தெருவில் நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் புதிதாக முதல் தளம் கட்டும் பணி ஒரு கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவது மேலும் மழை பாதிப்பு ஏற்படாத வகையில் மின் மோட்டார்கள் தயார் நிலையில் வைப்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்கு சமையல் கூடம் தயாராக வைப்பது பழுதடைந்த சாலைகளை சீரமைப்பது உள்ளிட்ட பணிகளை செய்து முடிக்கவும் தயார் நிலையில் வைக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.

இந்த கூட்டத்தில் குடிநீர் வாரிய பகுதி பொறியாளர், சுகாதாரத்துறை அதிகாரி, வருவாய் துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள், மின்வாரிய அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–151, இளைய தலைமுறையின் சிந்தனையை நல்வழியில் தூண்டுதல் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு, போதை அழிவில் பாதை மற்றும் பருவகால அரசு மக்கள் பரஸ்பர உதவி பற்றிய தலைப்பில் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் அ.மோசஸ், மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ், எம்.சி., மாவட்ட பிரதிநிதி வி.விஜயன், பகுதி அமைப்பாளர்கள் பி.ரகு, எம்.லோகேந்திரபாபு, வட்ட கழக நிர்வாகிகள் செ.ராமையா, எம்.சுந்தர், கே.குமார், கோ.கண்ணதாசன், என்.எஸ்.விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.